**Starting time 01.08 P.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 221/2015**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 06.07.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பெரியசாமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>**1** மற்றும் **3** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u> தாவா முதல் இன சொத்திற்கு தென்புறத்தில் யார் சொத்து உள்ளது என்றால், தம்மம்பட்டியிலிருந்து தெடாவூர் செல்லும் பிரதான சாலை அமைந்துள்ளது. தாவா முதல் இன சொத்திற்கு தென்புறத்திலும், தம்மம்பட்டி, தெடாவூர் சாலைக்கு வடபுறத்திலும், குப்புசாமி ரெட்டியார் வீடும், 3-ம் பிரதிவாதியின் வீடு, அப்பாவு வீடு மற்றும் தாவா 2வது இன சொத்தும் அமைந்துள்ளது என்றால், சரியல்ல. மேற்படி வீடுகள் அமைந்துள்ளதை நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால், தெரியாது. ஆணையர் அளவீடு செய்தபோது நானும் உடன் இருந்தேன் என்றால், ஆமாம். ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு நான் ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை என்றால், ஆமாம்.

2. தாவா 2வது இன சொத்தானது அரசு புறம்போக்கு தடம் என்றால், இல்லை. தாவா 2வது இன சொத்திற்கான பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை,

காலியிடம் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன். தாவா 2 வது இன சொத்து அரசு புறம்போக்கு என்றுதான் வருவாய்த்துறை ஆவணங்களில் கண்டுள்ளது என்றாலும், எனக்கு உரிமையான சொத்து என்று நான் உரிமை கோர இயலாது என்றாலும், சரியல்ல. தாவா 2 இன சொத்தைதான் பாதையாக பயன்படுத்தி குப்புசாமி ரெட்டியார், 1 மற்றும் 3 பிரதிவாதிகள் அப்பாவு ஆகியோர் தங்களது வீடுகளுக்கு செல்கிறார்கள் என்றால், சரியல்ல.

3. பிரதிவாதிகள் தாவா 2 வது இன சொத்தை ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றால், சரியல்ல. அரசு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக பிரதிவாதிகள் மீது வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேனா என்றால், நினைவில் இல்லை, நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. 24.07.2015 தேதியன்று அரசு புறம்போக்கு நிலத்தை நான் ஆக்கிரமிப்பு செய்யதாக பிரதிவாதிகள் வட்டாட்சியரிடம் மனு கொடுத்ததாகவும் அந்த நகல்தான் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால், ஆமாம், அதன் மீது எந்த உத்தரவும் எடுக்கவில்லை. அந்த மனுவின் மீது விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு வட்டாட்சியர் உத்தரவிட்டுள்ளார் என்றால், ஆமாம். அது பி.வா.சா.ஆ.1 ஆகும்.

4. பிரதிவாதிகள் கொடுத்த மனுவின் மீதான விசாரணையில் இருந்து தப்பிக்க வேண்டியே நான் பிரதிவாதிகள் மீது பொய்யாக இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.5 சம்பந்தமாக வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு நகலை தாக்கல் செய்துள்ளனா என்றால், இல்லை. வா.சா.ஆ.5 ஆவணம் வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால், இல்லை. நான் மனு கொடுத்து வா.சா.ஆ.5-ஐ பெற்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. தாவா 2 வது இன சொத்து அரசு புறம்போக்கு நிலம் என்பதால் பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் பெற இயலாது என்றாலும், சரியல்ல. பிரதிவாதிகளும் தாவா 2 இன சொத்தை பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால், சரியல்ல. என்னுடைய தாவா

தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 01.22 P.M.

(ஒப்பம்/- என்.திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
ஆத்தூர்.